# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 18.06.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4201/B/2022**

திரு. R. அந்தோணிமுத்து -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கோவில்பட்டி வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 15.11.2024 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:-

> ***இதுகுறித்து வட்டாட்சியர் அவர்கள் மனுதாரர் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட இன்னாசியம்மாள் ஆகிய இருவருக்கும் அழைப்பாணை அனுப்பி நேரில் விசாரணை செய்து மனுதாரருக்கு வழங்க வேண்டிய தகவலை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்கி அந்த அறிக்கையினை வருகிற 08.01.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

மேற்படி உத்தரவின்படி, வட்டாட்சியர், கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் 08.01.2025 அன்று ஆணையத்தின்முன்பு நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து, வட்டாட்சியர், கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் மீது காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கோரப்படுகின்றது.

மேற்படி இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பாணையின்மீது வட்டாட்சியர், கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் உரிய காலத்திற்குள் விளக்கம் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், வட்டாட்சியர், கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி

மாவட்டம் அவர்களிடமிருந்து விளக்கங்கள் ஏதும் பெறப்படவில்லை என தீர்மானித்து தக்க நடவடிக்கை பரிந்துரை செய்யப்படுமென உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**இணைப்பு: காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice)**

**வழக்கு எண். SA 4201/B/2022**
**பெறுநர்**

வட்டாட்சியர்,
கோவில்பட்டி வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்- 628501.

**மேல்முறையீட்டாளர்**
திரு. R. அந்தோணிமுத்து த/பெ. ரத்தினசாமி,
792, மேட்டு தெரு,
கூசாலிபட்டி,
இலுப்பையூரணி அஞ்சல்,
கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்- 628502.

Copy to: File GP PC